கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஐப்பசி மாத இதழ்
NEWS BULLETIN
OCTOBER 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA முகவரியில் நடைபெற்று வருகின்றது
09/11/ 2024	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா COVENTRY COMMUNITY RESOURCE CENTRE ல் நடைபெறும்.

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	1.00pm – 2.00pm
SUNDAYS	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வாணிவிழா

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் வாணி விழா 12/10/2024 அன்று COVENTRY STOKE CLUB மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திரு கணேசையா பிரசாத் ஐயா அவர்கள் சிறப்பான பூசையை நடாத்தியிருந்தார். கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "கானகலாதர" 'சங்கீத கலாநிபுண" இசைவாணர் திரு தீனதயாளன் பத்மநாதன் அவர்கள் சகலாவல்லிமாலை பாடியிருந்தார். அதனைத் தொடர்ந்து ஏடு தொடக்குதல், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.



கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தரம் 2 மாணவர்கள் செல்வன் பவிசன் அரவிந்தன், செல்வன் கவிசன் மயூரன் ஆகியோர் "ஜெயஜெயதேவி" என்ற பாடலை வழங்கினார்கள். தரம் 5 ஐச் சேர்ந்த மாணவர்களான, செல்வி அருஷ்னி விசயரூபன், செல்வி கேனுஷா கேதீஸ்வரன், செல்வி தருண்யா பகீரதன், செல்வன் லக்ஸன் திருவரங்கன் ஆகியோர் நவராத்திரி பற்றிய ஆற்றுகையை வழங்கினார்கள்.




கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலாவித்தகர்" கலைமானி ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்வி வர்ஷிதா ஜெயசங்கர், செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ் ஆகியோர் "அம்மன் கீர்த்தனம்" நடன நிகழ்வை வழங்கினார்கள். செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன் "சிவகீர்த்தனம்" நடன நிகழ்வை வழங்கியிருந்தார்.




தரம் 9 ஐச் சேர்ந்த செல்வி லக்ஸ்மிதா உருத்திரன் நவராத்திரி பற்றிய பேச்சை வழங்கியிருந்தார். கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக வயலின் மற்றும் வீணை ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவிகளான செல்வி வர்ஷிதா ஜெயசங்கர், செல்வி பிரதிகா செல்வகுமார் ஆகியோர் பக்திப் பாடல்களை வயலின் இசையில் வழங்கியிருந்தனர். செல்வி கௌரி கலாதரன், செல்வி சரவணகுமாரி சுப்பையா, செல்வி வர்ஷிதா ஜெயசங்கர் ஆகியோர் பக்திப் பாடல்களை வீணை இசையில் வழங்கியிருந்தார்கள்.






கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியர்களில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "நுண்கலைமானி" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்வி ஜெனுஷ்கா சிவா, செல்வி வைஷாலி காண்டீபன், செல்வி அபிநயா ரமணன் ஆகியோர் "மிஸ்ர அலாரிப்பு" நடன நிகழ்வை வழங்கியிருந்தார்கள்.

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவர்களான செல்வன் விஷால் காண்டீபன், செல்வன் சஜித் கேதீஸ்வரன், செல்வன் லக்ஸன் திருவரங்கன்,ஆகியோர் பக்திப் பாடல்களை சுரத்தட்டு இசையில் வழங்கியிருந்தார்கள்.




கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "கானகலாதர" 'சங்கீத கலாநிபுண" இசைவாணர் திரு தீனதயாளன் பத்மநாதன் அவர்களின் மாணவிகளான செல்வன் றெதுஷன் ரவீந்திரன், செல்வன் லக்ஸன் திருவரங்கன், செல்வி அருஷ்னி விசயரூபன், செல்வி சபீனா கோகுலநாதன் ஆகியோர் பக்திப் பாடல்களை வழங்கியிருந்தனர்.




தமிழ்த்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு பகீரதன் ஸ்ரீநாதன் அவர்களின் நன்றியுரையோடு நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன. பெருமளவான மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என அரங்கம் நிறைந்திருந்தது.




கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களின் வெவ்வேறு நிகழ்வுகள்

கொவன்றீஸ்வரத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில், 08/10/2024 அன்று கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலாவித்தகர்" கலைமானி ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ் செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன் ஆகியோர் நடன நிகழ்வை வழங்கியிருந்தனர்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி(TIFFANY) லோரன்ஸ் அவர்களின் மாணவர்களான செல்வன் அனுஜன் ஜெயசங்கர், செல்வன் லக்ஸன் திருவரங்கன், செல்வன் லிங்கா சர்வானந்தலிங்கம், செல்வன் விஷால் காண்டீபன், செல்வன் சஜித் கேதீஸ்வரன் ஆகியோர் பக்திப் பாடல்களை சுரத்தட்டு இசையில் வழங்கியிருந்தார்கள்.



ஆசிரியர்கள் இருவரும் சிவன்கோயில் நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்கள்.



WARWICKSHIRE COUNTY COUNCIL இன் ஆதரவுடன் BEDWORTH CIVIC HALL ல் 19/10/2024 அன்று நடைபெற்ற தீபாவளி சிறப்பு நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "நாட்டிய கலாநிபுண" "பரதக்கலாவித்தகர்" கலைமானி ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ், செல்வி தருண்யா பகீரதன் செல்வி வர்ஷிதா ஜெயசங்கர் ஆகியோர் நடன நிகழ்வை வழங்கி இருந்தார்கள். சபையோரினது பராட்டைப் பெற்றதோடு, சிலர் இவர்களது அபிநயங்களைக் கற்றுக் கொண்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



ஆசிரியர் பயிற்சிப் பட்டறை

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை 19/10/2024 சனிக்கிழமை அன்று பாடசாலையில் நடைபெற்றது. பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தலைவரும், பிரதம பரீட்சை ஆணையாளருமான மதிப்புக்குரிய திரு சிவாப்பிள்ளை ஐயா அவர்கள் சிறப்பான முறையில் பயிற்சிப் பட்டறையை நடாத்தி இருந்தார்.






பெற்றோர் கலந்துரையாடல்கள்.

ஆண்டு விழா சம்பந்தமான பெற்றோர் கலந்துரையாடல் 26/10/2024 சனிக்கிழமை காலை 10.15 மணிக்கு HUMBER HOTEL, HUMBER ROAD, COVENTRY CV3 1BA என்னும் முகவரியில் நடைபெற்றது. அதில், ஆண்டுவிழாவைச் சிறப்பாக நடாத்துவது தொடர்பாகவும், பாடசாலை இடமாற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.





பிரித்தானிய தமிழ் மொழிப் பரீட்சைகள் தொடர்பான பெற்றோர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தலைவரும், பிரதம பரீட்சை ஆணையாளருமான மதிப்புக்குரிய திரு சிவாப்பிள்ளை ஐயா அவர்களுடனான ZOOM இணையத்தின் வழியிலான கலந்துரையாடல் ஒன்று 28/10/24 அன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெற்றது.



பல பெற்றோர்கள் கலந்துகொண்டு தங்கள் சந்தேகங்களைக் கேட்டதோடு, ஆக்கபூர்வமான கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.





ஈழத்துபுலமைகள் (பாகம் 24)

கடந்த இதழிலே ,ஏகாம்பரப் புலவர்,கார்த்திகேய ஐயர்,சம்பந்த புலவர் ஆகிய புலவர்களின் பெருமைகளை சுருக்கமாகப் பார்த்திருந்தோம்.அவர்கள் பற்றி எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலே தொகுத்திருந்தேன்.
இவ்விதழிலே !

யாழ்ப்பாணம்,காரைதீவை பிறப்பிடமாக கொண்டவரும் முருகேச ஐயர் (இவரும் ஒரு புலவரே) அவர்களின் புதல்வருமாகிய
கார்த்திகேய புலவர் பற்றி பேசுவோம்;
சில த்சாப்தங்களாக காரை நகர் என அழைக்கப்படும் இடமே காரைதீவாகும்.நிற்க;
கார்த்திகேய ஐயர் தனது தந்தையாரிடத்து தமிழ் மொழியையும்,இலக்கண இலக்கியங்களை காரைதீவு சண்முக நாத ஆசிரியரிடமும்,அதே ஊரைச் சேர்ந்த சுவாமி நாத தேசிகரிடம் சம்ஸ்கிருதமும் கற்றுத் தேர்ந்தவர்.
இளமையிலேயே கவித்திவிற்ன் மிக்கவராக விளங்கினார்.இவரது தந்தையாரால் பாடப்பட்டு இடையிலே நிறுத்தப்பட்டிருந்த ' தன்னை யமக வந்தாதி" எனும் நூலை பாடி முடித்தவர் என்பர்.தந்தையார் எழுபது பாடல்களும்,தனயன் முப்பது பாடல்களும்பாடியதாகறியக்கிடக்கிறது.
இவரது ஒரு பாடலைக் காண்போம்;
" மணீக்கோ கனகத் தரு நிதி யாரும்வணங்கிடமா
மணிக்கோ கனகத் தருமா வன்பாக்கு வைப்பவணீ
மணிக்கோ கனகத் தருவகை போடருன்மைந்த நன்கார்
மணிக்கோ கனகத் தரும் புகழ்றெந்தன்னை மன்னவனே"

கார்த்திகேய புலவர்க்கு மிக அரிய வரமாக இருபாலை சேனாதிராய முதலியாரிடம் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.
நெல் மதிப்பீட்டின் பொருட்டு சேனாதிராயமுதலியார் அவர்கள் காரைதீவுக்குச் செல்லும் போதெல்லாம் முருகேச ஐயர் வீட்டிலேயே சில வாரங்கள் தங்குவாராம்.,அப்போதெல்லாம் இரவு நேரங்களில் முதலியாரிடம் தனது

சந்தேகங்களை கேட்டுத்தெளிந்து கொள்வாராம்.அக்காலங்களிலே கர்த்திகேயரின் புத்தி கூர்மையையும்,ஞாபக சக்தியையும் கண்ட முதலியாரவர்கள் தமது ஊருக்கு அழைத்து சென்று தன்னுடன் இருத்தி இலக்கண இலக்கியங்களை கற்பித்து பெரும்புலவராக விளங்க வைததாராம்.இவர் காரைதீவிலே ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து பல் மாணாக்கரகு கற்பித்து வந்தனர்.

(மீதி அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
திரு தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்

